**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**M.C. No. 7 /2024**

Deposition of PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : நளினி | Defence | : |
| Father Name | : சண்முகசுந்தரம் | Court | : |
| Village | : பொறையார் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 30/25 | | |

Dated :–22.04.2025.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–**

நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எதிர்மனுதாரர் என்ன படிப்பு படித்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிர்மனுதாரருக்கும் எனக்கும் நடந்த திருமணம் எனக்கு 2வது திருமணம் என்றாலும் எதிர்மனுதாரருக்கு முதல் திருமணம் என்றாலும் சரிதான். எனக்கும் எனது முதல் கணவருக்கும் எப்போது விவாகரத்து ஏற்பட்டது என்றால் ஒரு வருடத்திற்கு முன்பு விவாகரத்து ஆனது. தேதி, மாதம் நினைவில் இல்லை. எனது முதல் கணவருடன் எத்தனை வருடம் சேர்ந்து வாழ்ந்தேன் என்றால் ஒரு வருடம் சேர்ந்து வாழ்ந்தேன். முதல் திருமணத்தின் மூலம் எனக்கு குழந்தைகள் இல்லை என்றால் சரிதான். எனக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 24.03.2024 அன்று திருமணம் நடந்தது. எதிர்மனுதாரருடன் திருமணத்திற்கு பிறகு எவ்வளவு காலம் சேர்ந்து வாழ்ந்தேன் என்றால் 3 மாத காலம் சேர்ந்து வாழ்ந்தேன். 2ம் திருமணத்தின் மூலமும் எனக்கு எந்த குழந்தையும் பிறக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்கனவே திருமணம் நடந்த விபரம் தெரிந்து தான் எதிர்மனுதாரர் என்னை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். திருமணத்தின் போது எனக்கு செய்யப்பட்ட சீர்வரிசைகளுக்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனக்கும் எதிர்மனுதாரருக்கும் திருமணமானதிலிருந்து நான்

எதிர்மனுதாரருடன் தாம்பத்திய உறவில் ஈடுபடவில்லை என்றால் சரிதான். எனக்கு உடல்நிலை சரியில்லை என்ற காரணத்தை கூறி மனரீதியாகவும், உடல்ரீதியாகவும் அவரை துன்புறுத்தி வந்தேன் என்றால் சரியல்ல. எனக்கு முடக்குவாதம் உள்ள விபரத்தை திருமணத்திற்கு முன்பு எதிர்மனுதாரரிடம் சொல்லாமல் மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. ரவிச்சந்திரன் என்பவர் எனது உடன்பிறந்த சகோதரரோ, உறவினரோ இல்லை என்றால் சரிதான். என்னுடன் வேலை பார்த்தவர் ஆவார். எனக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே எப்போது பிரச்சனை வந்தாலும் அவரை தான் பஞ்சாயத்து செய்ய அழைத்து வருவேன் என்றால் சரிதான். ஏன் என்றால் எதிர்மனுதாரரை எனக்கு திருமணம் செய்து வைத்தவர் ரவிச்சந்திரன் தான். ரவிச்சந்திரன் என்பவருக்கும் எதிர்மனுதாரருக்கும் நல்ல பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். ரவிச்சந்திரனுடன் நான் எந்த பேச்சுவார்த்தையும் வைத்து கொள்ளக்கூடாது என எதிர்மனுதாரர் என்னை கண்டித்தார் என்றால் சரிதான். ஆனால் நான் ரவிச்சந்திரன் என்பவருடன் தொடர்ந்து பேசி வந்தேன் என்றால் சரிதான். ஆடி மாதத்திற்கு 10 நாட்களுக்கு முன்பே எனது பெற்றோர் மற்றும் ரவிச்சந்திரன் ஆகியோர் என்னை ஆடி மாதத்திற்காக எனது பெற்றோர் வீட்டிற்கு அழைத்து செல்ல வந்தார்கள் என்றால் சரிதான். அவர்களிடன் எதிர்மனுதாரர் ஏன் முன்கூட்டியே அழைத்து செல்கிறீர்கள் என கேட்டார் என்றால் சரிதான். அப்போது எதிர்மனுதாரர் மற்றும் அவரது பெற்றோரை நானும் எனது பெற்றோர் மற்றும் ரவிச்சந்திரனும் சேர்ந்து தகாத வார்த்தைகளால் திட்டி விட்டு வீட்டை விட்டு வந்து விட்டோம் என்றால் சரியல்ல. அவர்கள் தான் எங்களை திட்டினார்கள். அதனால் நாங்கள் வீட்டைவிட்டு வந்துவிட்டோம். 08.07.2024 அன்று நன்னிலம் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த புகாரில் எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என கோரி இருந்தார் என்றால் சரிதான். அந்த புகாரின் பேரில் நடந்த விசாரணையின் போது எனக்கு எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என எழுதிக் கொடுத்தேன் என்றால் சரிதான். 05.08.2024 அன்று நானும் எனது பெற்றோர் மற்றும் ரவிச்சந்திரன் ஆகியோர் எதிர்மனுதாரர் வீட்டிற்கு சென்று எனக்கு உடல்நிலை சரியில்லை என்பதால் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்று கூறி திருமண முறிவு ஒப்பந்தம் எழுதிக் கொடுத்தேன் என்றால் சரிதான். அப்போது எனது சீர்வரிசை பொருட்களை எனது வீட்டிற்கு எடுத்து சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. நான் சீர்வரிசை பொருட்களை எடுத்து

செல்லவில்லை என்று இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி திருமண முறிவு ஒப்பந்தத்தில் நான் எந்த ஜீவனாம்சமும் பெறமாட்டேன் என எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் என்னை மிரட்டி எழுதி வாங்கி கொண்டார்கள். எதிர்மனுதாரர் வீட்டிற்கு சென்று நானே தான் திருமண முறிவு ஒப்பந்தத்தை எழுதிக் கொடுத்தேன்என்றாலும் மிரட்டி எழுதி வாங்கி கொண்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் தற்போது குணா பைனான்ஸில் வேலை பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். நான் எனது மருத்துவ செலவிற்காக வேலை பார்த்து வருகிறேன். மேற்படி விபரத்தை எனது மனுவிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. கடந்த இரண்டு மாதங்களாக தான் நான் வேலை பார்த்து வருகிறேன். நான் ஆரம்ப காலத்திலிருந்தே வேலை பார்த்துவருகிறேன் என்றாலும் ஜீவனாம்சம் பெற வேண்டும் என்பதற்காக இரண்டு மாதங்களாக வேலை பார்த்து வருவதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது விருப்பத்தின் பேரில் தான் நான் எதிர்மனுதாரருடன் வாழ மறுத்துவருகிறேன் என்றால் சரிதான். ஒரு நாள் எனது மாதவிடாய் காலத்தில் என்னை எதிர்மனுதாரர் மருத்துவமனைக்கு அழைத்து செல்வதாக கூறி ஒரு சவுக்கு தோப்பிற்கு அழைத்து சென்று என்னை கொன்று விடுவேன் என மிரட்டி என்னுடன் உடலுறவு வைத்துக்கொண்டார். அதனால் நான் பயந்து கொண்டு அவருடன் வாழ மறுத்து வந்துவிட்டேன். மேற்படி விபரத்தை எனது மனுவிலும் புகார் வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லாமல் அவரை துன்புறுத்த வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு எதிர்மனுதாரர் எனது முடக்குவாதத்திற்கு சரியான மருத்துவ சிகிச்சை எதுவும் செய்யாமல் இருந்ததால் தான் எனது உடல்நிலை மிகவும் மோசமானது. தற்போது எதிர்மனுதாரர் எனக்கு சிகிச்சை செய்ய தயாராக இருக்கிறார் என்றாலும் என்னுடன் சேர்ந்து வாழ அவர் தயாராக உள்ளார் என்றால் எனக்கு அவருடன் சேர்ந்து வாழ விருப்பமில்லை. நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லாததால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்பதால் நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனவே இந்த மனு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.